# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2019

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 10

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

சுட்டெண்: | | | | | | | | | |

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 5 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. மொழிக்கு முதலில் வராத எழுத்துகள்

| | | | |
|---|---|---|---|
| அ) 107 | ☐ | ஆ) 100 | ☐ |
| இ) 147 | ☐ | ஈ) 117 | ☐ |

2. கூத்துகள் பற்றிக் கூறும் கழக இலக்கியம்

| | | | |
|---|---|---|---|
| அ) குறுந்தொகை | ☐ | ஆ) கலித்தொகை | ☐ |
| இ) நெடுநல்வாடை | ☐ | ஈ) மலைபடுகடாம் | ☐ |

3. தமிழர் சிந்து ஆற்றுப் பகுதியை விட்டுப் புலம்பெயரக் காரணமானவர்கள்

| | | | |
|---|---|---|---|
| அ) ஆரியர் | ☐ | ஆ) ஐரோப்பியர் | ☐ |
| இ) களப்பிரர் | ☐ | ஈ) நாயக்கர் | ☐ |

4. போறம் என்ற பேச்சுவழக்குச் சொல்லின் செவ்வழக்கு

| | | | |
|---|---|---|---|
| அ) போறோம் | ☐ | ஆ) போகின்றோம் | ☐ |
| இ) போகிறம் | ☐ | ஈ) போறாம் | ☐ |

5. களை என்பது

| | | | |
|---|---|---|---|
| அ) அழகு | ☐ | ஆ) வளையல் | ☐ |
| இ) ஒலி | ☐ | ஈ) அம்பு | ☐ |

6. படித்த என்ற பெயரெச்சத்தை வினையெச்சமாக மாற்றினால்

| | | | |
|---|---|---|---|
| அ) படித்தான் | ☐ | ஆ) படித்து | ☐ |
| இ) படிக்கும் | ☐ | ஈ) படி | ☐ |

7. பாகல் என்பது

அ) பகாமொழி ☐ ஆ) பொதுமொழி ☐
இ) தொடர்மொழி ☐ ஈ) இணைமொழி ☐

8. **குறள் :** இல்வாழ்வான் என்பான் இயல்புடைய ________
நல்லாற்றின் நின்ற துணை

அ) நால்வர்க்கும் ☐ ஆ) மூவர்க்கும் ☐
இ) இருவர்க்கும் ☐ ஈ) ஐவர்க்கும் ☐

9. "குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள" இதில் வரும் கோடு என்பது

அ) மலை ☐ ஆ) கண்டம் ☐
இ) நிலம் ☐ ஈ) கொடி ☐

10. பண்டா- செல்வா உடன்படிக்கை செய்யப்பட்ட ஆண்டு

அ) 1957 ☐ ஆ) 1948 ☐
இ) 1956 ☐ ஈ) 1972 ☐

11. மலர்களில் தேனருந்தும் வண்டினங்கள்

அ) முழங்குகின்றன ☐ ஆ) முரல்கின்றன ☐
இ) சீறுகின்றன ☐ ஈ) உறுமுகின்றன ☐

12. சென்றவன் என்பது

அ) வினையாலணையும்பெயர் ☐ ஆ) இடுகுறிப்பெயர் ☐
இ) எதிர்மறை வினை ☐ ஈ) குறிப்புவினை ☐

13. மருதநில வயலோரத்தை ஆடலரங்காகப் பாடியவர்

அ) இளங்கோ ☐ ஆ) புகழேந்தி ☐

இ) ஔவையார் ☐ ஈ) கம்பர் ☐

14. நான் வந்தான் என்பது

அ) காலவழு ☐ ஆ) விடைவழு ☐

இ) பால்வழு ☐ ஈ) இடவழு ☐

15. பீடு என்பது

அ) கருமை ☐ ஆ) பெருமை ☐

இ) இனிமை ☐ ஈ) உரிமை ☐

16. நடுகல் எடுப்பதற்கான ஆறு நிலைகள் பற்றிக் குறிப்பிட்டவர்

அ) திருவள்ளுவர் ☐ ஆ) தொல்காப்பியர் ☐

இ) ஔவையார் ☐ ஈ) கபிலர் ☐

17. உடம்படுமெய் தோன்ற ஓர் எடுத்துக்காட்டு

அ) வாழைப்பழம் ☐ ஆ) மணியோசை ☐

இ) பற்பொடி ☐ ஈ) தமிழினிமை ☐

18. கரும்புத்தோட்டக் கூலிகளாகத் தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளில் ஒன்று

அ) பர்மா ☐ ஆ) மலேசியா ☐

இ) சிங்கப்பூர் ☐ ஈ) தியூனியன் ☐

19. மாதவி நடன அரங்கேற்றத்தில் ஆடிய கூத்து வகைகள்

அ) பன்னிரண்டு ☐ ஆ) எட்டு ☐

இ) பதினொன்று ☐ ஈ) பத்து ☐

20. கட்டுகிறாய் என்பது

அ) தன்வினை ☐ ஆ) பிறவினை ☐

இ) எதிர்மறை வினை ☐ ஈ) எச்சவினை ☐

21. முதன்முதலில் தமிழின் பெருமையைத் தமிழர்க்கு உணர்த்தித் தன் பெயரைத் தமிழாக்கியவர்

அ) கால்டுவெல் ☐ ஆ) தேவநேயப்பாவாணர் ☐

இ) மறைமலையடிகள் ☐ ஈ) பரிதிமாற்கலைஞர் ☐

22. தொடக்ககாலத்தில் வில்லோடு இசைக்கப்பட்ட கருவி

அ) ஏழில் ☐ ஆ) பறை ☐

இ) குடம் ☐ ஈ) முரசு ☐

23. அறவழியில் போராடி உண்ணா நோன்பு இருந்து உயிர் துறந்தவர்

அ) சங்கர் ☐ ஆ) விக்ரர் ☐

இ) திலீபன் ☐ ஈ) மாலதி ☐

24. உவமைத்தொடருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) மலையேறிவிட்டது ☐ ஆ) நுனிப்புல் மேய்தல் ☐

இ) உடலும் உயிரும் போல ☐ ஈ) கூடிக்குலாவி ☐

25. அறுசிறு பொழுதுகளில் ஒன்று

அ) கார் ☐ ஆ) விடியல் ☐

இ) பின்பனி ☐ ஈ) முன்பனி ☐

26. இந்தியாவில் நடுகற்கள் அதிகளவில் காணப்பட்ட இடம்

அ) மலையாள மாநிலம் ☐ ஆ) தமிழ்நாடு ☐

இ) கன்னட மாநிலம் ☐ ஈ) தெலுங்கு மாநிலம் ☐

27. **பழமொழி :** ஆழமறியாது காலை ________________ .

அ) இடாதே ☐ ஆ) தொடாதே ☐

இ) எடாதே ☐ ஈ) விடாதே ☐

28. தமிழ் மாணவரின் உயர்கல்வியில் தரப்படுத்தல் முறை கொண்டுவரப்பட்ட ஆண்டு

அ) 1956 ☐ ஆ) 1972 ☐

இ) 1958 ☐ ஈ) 1976 ☐

29. வைக்கோல் என்ற சொல்லின் தொகுதியைக் குறிக்கும் மரபுப்பெயர்

அ) கற்றை ☐ ஆ) கொத்து ☐

இ) வரிசை ☐ ஈ) கூட்டம் ☐

30. ந.சி. கந்தையா பிறந்த ஊர்

அ) வன்னி ☐ ஆ) மன்னார் ☐

இ) பூநகரி ☐ ஈ) கந்தரோடை ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

மக்கள் விரைந்து சென்று கொண்டிருந்தனர். அவர்களின் முகங்களில் மகிழ்ச்சியும் ஏக்கமும் காணப்பட்டன. போரின் கொடுமையினால் உடுத்த உடையுடன் இடம்பெயர்ந்தவர்கள் இன்று மீண்டும் தங்கள் ஊருக்குச் சென்று கொண்டிருக்கின்றார்கள். அங்கு ஏமாற்றம்தான் காத்திருந்தது. அவர்களது ஊர் காடாகிக் கிடந்தது. மக்கள் நடமாட்டம் இல்லாததனால் பாம்புகள் பெருகியிருந்தன. அவர்கள் பாம்புகளுக்கும் மிதிவெடிகளுக்கும் அஞ்சி நடந்தனர். வீடுகள் இடிந்தும் கூரையில்லாமலும் காணப்பட்டன. வீடுகளுக்குள்ளேயும் பெரிய மரங்கள் வளர்ந்திருந்தன. கோவில் பாழடைந்து கிடந்தது. பலநூறு மாணவர்கள் படித்த பள்ளிகள், மற்றும் கடைகள் எல்லாம் அழிந்துவிட்டன. தனது வீடு இருந்த இடத்தில் ஒரு பெண் அழுதுகொண்டிருந்தாள். 28 ஆண்டுகளுக்குமுன் இங்கே எனது வீடு இருந்தது. இன்று வீடு இருந்ததற்கான அடையாளத்தையே காணோமே! அவளது அழுகை ஒலி கேட்டு மக்கள் அவள் அருகே வந்தனர். அழவேண்டாம்! நாங்கள் இப்பற்றைக் காட்டை அழித்து மீண்டும் எமது ஊரைக் கட்டி எழுப்புவோம் என்று ஆறுதல் கூறினர்.

1. மக்கள் எதனால் ஊரைவிட்டு இடம் பெயர்ந்தனர் ?

_______________________________________________

_______________________________________________

2. மக்கள் எவற்றுக்கு அஞ்சி நடந்தனர்?

_______________________________________________

_______________________________________________

3. அழுதுகொண்டிருந்த பெண்ணுக்கு மக்கள் கூறிய ஆறுதல் என்ன?

_______________________________________________

_______________________________________________

4. போரின்பின் வீடுகள் எவ்வாறு காணப்பட்டன?

_______________________________________________

_______________________________________________

5. மக்களின் முகங்களில் எத்தகைய உணர்வுகள் காணப்பட்டன?

_______________________________________________

_______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. நடுகல் முற்காலத்தில் வேறு எப்பெயரால் அழைக்கப்பட்டது? நடுகற்களின் கீழ் எவ்வெப்பொருட்களைப் புதைப்பர்?

________________________________________

________________________________________

2. இல்வாழ்வானின் பண்பும் பயனும் எது ? துவ்வாதவர் என்போர் யார்?

________________________________________

________________________________________

3. தமிழரின் முதற் புலப்பெயர்வுக்கான காரணம் யாது?

________________________________________

4. பாவாணர் எத்திட்டத்தின் இயக்குநராகப் பணி புரிந்தார்?

________________________________________

5. ஈழத்தின் கிழக்குப் பகுதியில் வில்லிசையை வளர்த்த பெருமகன் யார்? அவருடைய மாணவனின் பெயரைத் தருக.

________________________________________

________________________________________

6. தொலைக்காட்சியின் சிறப்பியல்புகள் எவை?

________________________________________

________________________________________

7. சிங்களம் மட்டும் ஆட்சிமொழிச் சட்டம் என்பது எப்பொழுது, யாரால் கொண்டுவரப்பட்டது?

________________________________________

புள்ளிகள் 10

**4. பின்வரும் கவிதைத் தலைப்பில் ஒன்றினைத் தெரிவு செய்து, எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

அன்னை பாடும் தாலாட்டில்
அன்பாய்க் கொஞ்சிப் பேசும் மழலைகள்

ஒழுக்கத்துடனே நீ வாழ்ந்தால்
உலகம் உன்னைப் போற்றிடும் !

உரிமைக்காகப் போராடிய போராட்டம் !
உலகறியச் செய்த நம் போராட்டம் !

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. அ. உருபு ஏற்காத வேற்றுமைகள் எவை ?

______________________________

ஆ. அவற்றிற்கு ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

______________________________

______________________________

2. உயிர்முன் உயிர் புணர்தலுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

______________________________

______________________________

3. பின்வருவனவற்றின் பகுதி, இடைநிலை, விகுதி என்பவற்றைத் தருக.

| | **பகுதி** | **இடைநிலை** | **விகுதி** |
|---|---|---|---|
| நிற்கின்றன | ________ | ________ | ________ |
| கண்டான் | ________ | ________ | ________ |

4. பின்வருவனவற்றின் மரபுப்பெயர்களை எழுதுக.

**அ) இலைக்குரிய மரபுப் பெயர்கள்**

வேம்பு ________ நெல் ________ கமுகு ________

**ஆ) பிஞ்சுக்குரிய மரபுப் பெயர்கள்**

மா ________ பனை ________ பலா ________

5. ஒவ்வொன்றிற்கும் இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

குறிப்புவினை ________ ________

காரணப்பெயர் ________ ________

தொழிற்பெயர் ________ ________

புள்ளிகள் 15

**6) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

இவ்வுலகில் பல்வேறு மக்களினங்கள் உள்ளன. எனினும், பிறரை மதித்தல், பிறருக்கு உதவுதல், அன்பு காட்டுதல், பிறர் துன்பம் கண்டு இரங்குதல் போன்ற பண்புகள் எல்லாவின மக்களுக்கும் பொதுவானதாகும். அதுபோல் பெற்றோர், மூத்தோர் போன்றவர்களின் வாழ்க்கை முறைகளைப் பிள்ளைகள் பின்பற்றுவர். நல்லொழுக்கமுள்ள குடும்பத்துப் பிள்ளைகள் நல்லவர்களாக வாழ்ந்து வாழ்வில் முன்னேறுவர். தீயபண்புகள் கொண்ட குடும்பத்துப் பிள்ளைகள் தீயவர்களாக உருவாகுகின்றனர். இதுவும் எல்லா மக்கட் கூட்டத்திற்கும் பொதுவானதாகும். நற்பண்புகளை வளர்த்து, நல்லவர்களாக வாழ்வோம்.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- சேரமான் வஞ்சினம்

- வறுமையின் கொடுமை
  - வறுமையென்றால் என்ன? அதற்கான காரணம்
  - வறுமையினால் ஏற்படும் விளைவுகள்
  - அதைத்தடுக்கும் வழிகள்
  - நீர் செய்யும் உதவிகள்

- கல்வியும் தொழிலும்
  - கல்வியும் பயன்களும்
  - கிடைக்கும் வேலை வாய்ப்புகளும் பயன்பாடுகளும்
  - நீர் விரும்பிய கல்வித்துறையும் பயன்பாடும்

புள்ளிகள் 20